**அனுமதி பெறாமல் பி.டி. கத்தரி ஆராய்ச்சி : தமிழ்நாடு வேளாண் பல்கலை, மான்சான்டோ மீது வழக்கு**

First Published : 12 Aug 2011 03:35:30 AM IST

சென்னை, ஆக. 11: மரபணு மாற்ற கத்தரிக்காய் உற்பத்திக்கான ஆராய்ச்சிக்கு, தொடர்புடைய எந்த துறையிடமும் அனுமதி பெறவில்லை என்பதற்காக சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க தேசிய பல்லுயிர்ப்பெருக்க ஆணையம் முடிவு செய்திருக்கிறது.

மரபணு மாற்ற கத்தரிக்காயை வணிக ரீதியில் பயிரிட அனுமதிக்கலாமா என்ற சர்ச்சை எழுந்தபோது விவசாயிகளின் கருத்துகளைக் கேட்டறிந்த அப்போதைய சுற்றுச்சூழல் துறை இணை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், இதற்குத் தடை விதித்து கடந்த பிப்ரவரி மாதம் உத்தரவிட்டார்.

இந்த ரக கத்தரிக்காயால் ஏற்படக்கூடிய உடல்நல பாதிப்புகளைப் பற்றி அறியும் வரையில் இதை அனுமதிக்க வேண்டாம் என அப்போது அவர் அறிவித்தார். இதில் புதிய திருப்பமாக, விதைகளில் மரபணு மாற்ற ஆராய்ச்சி மேற்கொள்ளும்போது உரிய எந்த துறையிடமும் அனுமதி வாங்கவில்லை என்று தேசிய பல்லுயிர்ப்பெருக்க ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த விதி மீறலுக்காக சட்டபூர்வ நடவடிக்கை எடுப்பது என்று கடந்த ஜூன் 20-ம் தேதி தில்லியில் நடந்த அந்த ஆணையத்தின் கூட்டத்தில் முடிவு செய்திருக்கின்றனர். இந்தக் கூட்டத்தின் தீர்மான விவரங்கள் வியாழக்கிழமை வெளியிடப்பட்டுள்ளன.

மான்சான்டோ மரபணு விதை ஆராய்ச்சி நிறுவனத்தின் இந்திய பிரிவான மேஹோ நிறுவனத்தின் மீதும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், தார்வாரில் உள்ள வேளாண்மை அறிவியல் பல்கலைக்கழகம் உள்ளிட்டவை மீதும் இந்த சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. கத்தரி விதையில் மரபணு மாற்ற ஆராய்ச்சி செய்வதற்காகக் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நான்கு கத்தரிக்காய் ரகங்களின் விதைகளை மான்சான்டோ நிறுவனத்திற்கு அனுப்பியிருக்கிறது.

பிறகு மரபணு மாற்றம் செய்ய விதைகளையும் இந்தப் பல்கலைக்கழகம் பெற்றிருக்கிறது. இந்த விவரங்களை, வேளாண்மைப் பல்கலைக்கழகம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அளித்த பதிலில் தெரிவித்துள்ளது.

இதேபோல கர்நாடகத்தில் விவசாயிகள் பயன்படுத்தும் 6 வகையான கத்தரிக்காய் விதைகளிலும் மான்சான்டோ நிறுவனம் ஆராய்ச்சி செய்து மரபணு மாற்றம் செய்திருக்கிறது. தேசிய

பல்லுயிர்ப்பெருக்க ஆணையம், மாநில பல்லுயிர்ப்பெருக்க வாரியங்கள் மற்றும் பொருத்தமான உள்ளூர் பல்லுயிர்பெருக்க நிர்வாக குழுக்களின் அனுமதி எதையும் பெறாமலேயே இந்த ஆராய்ச்சிகளை மான்சான்டோ மேற்கொண்டிருப்பது சட்ட மீறல் என்று சுற்றுச்சூழல் அமைப்புகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

பாரம்பரிய விதைகளைப் பொருத்தவரை அரசுதான் அவற்றின் பாதுகாவலராக இருக்க வேண்டும். இருந்தாலும் அந்த விதைகளுக்கு அரசு உரிமையாளர் அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். வணிகம், ஆராய்ச்சி மற்றும் வேறு வகையில் பல்லுயிர்ப்பெருக்க சூழ்நிலைகளைக் கையாள வேண்டியிருந்தால், பல தலைமுறைகளாக அதைப் பராமரித்து பாதுகாத்து வரும் உள்ளூர் சமூகத்தினரிடம் அதற்கு அனுமதி பெற வேண்டும் என்பது சட்டமாகும் என துறை வல்லுநர்கள் கூறுகின்றனர்.

மான்சான்டோ நிறுவனத்துக்கு 4 கத்தரி ரகங்களின் விதைகளை அனுப்பி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒப்பந்தம் செய்து கொண்டபோது, "விதைகளின் உரிமையாளர்' என்று தன்னை குறிப்பிட்டுக் கொண்டுள்ளது. இதுவும் விதிகளை மீறிய செயல் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. மான்சான்டோ நிறுவனமும், தார்வாட், கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகங்களும் வெவ்வேறு சமயங்களில் வெளியிட்ட செய்திகளில், உரிய அனுமதியை தாங்கள் பெற்றிருப்பதாகக் கூறியுள்ளன.

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மூத்த விஞ்ஞானி ஒருவரைக் கேட்டபோது ஆராய்ச்சி தொடங்கும்போது யாருடைய அனுமதியும் பெறத் தேவையில்லை என்றும் அதை வணிக ரீதியிலான பயன்பாட்டுக்கு வெளியிட முயற்சிக்கும் போது மத்திய அரசின் துறைகள் கேட்கும் கேள்விகளுக்கு சரியான விளக்கம் தந்து அனுமதி பெற்றாக வேண்டும் என்றும் கூறினார். யாருடைய அனுமதியும் பெறத் தேவையில்லை என்ற நிலை இருந்தால், பல்லுயிர்ப்பெருக்க பாதுகாப்பில் உயர்ந்த அமைப்பான தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையம் எப்படி, ""அனுமதி பெறாதது குறித்து சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்படுகிறது'' என தீர்மானம் நிறைவேற்ற முடியும் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

**சொட்டுநீர் பாசனத் திட்டத்தில் புகார் வந்தால் நடவடிக்கை: வேளாண் அமைச்சர் அறிவிப்பு**

First Published : 12 Aug 2011 03:41:57 AM IST

சென்னை, ஆக. 11: சொட்டு நீர் பாசனத் திட்டத்தில் முறைகேடுகள் நடந்திருப்பதாகப் புகார்கள் வந்தால் அதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் சட்டப்பேரவையில் வியாழக்கிழமை கூறினார்.

கேள்வி நேரத்தின் போது, சொட்டு நீர் பாசனம் குறித்த கேள்விக்கு அவர் பதில் அளித்த போது, முன்னாள் அமைச்சர் கு.ப. கிருஷ்ணன் துணைக் கேள்வி எழுப்பினார்.

"மின்சாரச் செலவைக் குறைக்கவும், விளைச்சலை அதிகரிக்கவும், உரச் செலவை குறைக்கவும் சொட்டு நீர் பாசனத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் கடந்த ஆட்சியில் பிரதானக் குழாய்கள் மட்டும் அமைத்துவிட்டு சிறு டியூப்கள் அமைக்காமல் மோசடி செய்திருக்கிறார்கள். அந்த மோசடிக்கு சில நிறுவனங்கள் துணை போயிருக்கின்றன. அதுபோன்ற செயல்களைக் கண்டறிந்து உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?' என அவர் கேட்டார்.

அதற்கு அமைச்சர் செங்கோட்டையன் அளித்த பதில்:

இது குறித்த குற்றச்சாட்டுகளை அரசின் கவனத்துக்கு கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்க அரசு தயாராக உள்ளது.

எங்கே குறைபாடு ஏற்பட்டது, பாதிக்கப்பட்டது யார் என்பதை கடிதமாகக் கொடுத்தால் கவனமாகப் பரிசீலித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்றார் அமைச்சர்.

"முந்தைய ஆட்சியாளர்களுக்கு பினாமியாக சில நிறுவனங்கள் சொட்டு நீர் பாசனத் திட்டத்தில் முறைகேடு செய்திருப்பதாகவும்,பொருள் அல்லது உபகரணங்களின் உண்மை விலையை இரட்டிப்பாக காட்டி அதை மானியத்தில் தருவதாகச் சொல்லி, நிறுவனத்தின் மூலம் அந்தப் பணத்தை மோசடி செய்துள்ளனர்' என்று கூறிய மார்க்சிஸ்ட் கட்சிக் கொறடா கே. பாலகிருஷ்ணன், இத் திட்டத்தில் வழங்கப்படும் உபகரணங்கள் தரமானதாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இதுதொடர்பாக முதல்வர் தெரிவித்துள்ள யோசனைகளின்படி ஒரு குழு அமைத்து முழுப் பயனும் விவசாயிகளுக்கு கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

**தமிழகத்தில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 12 Aug 2011 03:32:54 AM IST

சென்னை, ஆக. 11: வெப்ப சலனம் காரணமாக தமிழகம், புதுவையில் வெள்ளிக்கிழமை மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தமிழகம், புதுவையின் பல்வேறு பகுதிகளில் புதன்கிழமை இரவு விடியவிடிய மழை பெய்தது. வியாழக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டம் திருவாலங்காட்டில் 110 மில்லி மீட்டர் மழை பதிவானது. புதுவையில் 100 மில்லி மீட்டரும், தாம்பரம், செய்யாறு உள்ளிட்ட பகுதிகளில் 90 மில்லி மீட்டரும் மழை பதிவானது.

மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு: ஆரணி 80, திருவள்ளூர், போளூர், வந்தவாசி, காவேரிப்பாக்கம், ஏற்காடு 70, திண்டிவனம், அரக்கோணம், ஊத்தங்கரை 50, காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர், பூந்தமல்லி, உளுந்தூர்பேட்டை, விழுப்புரம், வாலாஜாபேட்டை, உதகை 40, திருவண்ணாமலை, குடியாத்தம், திருப்பத்தூர், செம்பரம்பாக்கம், கொரட்டூர், செங்குன்றம், செஞ்சி, கள்ளக்குறிச்சி, செங்கம், சாத்தனூர் அணை, மருங்காபுரி, தேவக்கோட்டை, ஓமலூர் 30, ஓசூர், கிருஷ்ணகிரி 20, தஞ்சாவூர், கொள்ளிடம், உசிலம்பட்டி, ஜெயங்கொண்டம், நாகப்பட்டினம், வேலூர் 10.

வானிலை முன் அறிவிப்பு: வெப்ப சலனம் காரணமாக தமிழகம், புதுவையில் அடுத்த 24 மணி நேரத்தில் மாலை அல்லது இரவு நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவுக்கு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

## தினமலர்

**மக்காசோளம் சாகுபடியில் சாதனை விவசாயிக்கு பாராட்டு விழா**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 12,2011,01:36 IST

திருநெல்வேலி : மக்காசோளம் சாகுபடியில் சாதனை படைத்த சங்கரன்கோவில் விவசாயி ராஜகோபாலை பாராட்டி இந்தியன் பாங்க் நெல்லை மண்டல மேலாளர் பஸ்லூர் ரஹ்மான் பரிசு வழங்கி பாராட்டினார். இந்தியன் பாங்க் நெல்லை மண்டலம் சார்பில் மக்காசோளம் சாகுபடியில் மாநில அளவில் முதலிடம் பெற்ற சங்கரன்கோவில், ஆலமநாயக்கன்பட்டி விவசாயி ராகோபாலுக்கு பாராட்டு தெரிவிக்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு இந்தியன் பாங்க் நெல்லை மண்டல மேலாளர் பஸ்லூர் ரஹ்மான் தலைமை வகித்து விவசாயி ராஜகோபாலுக்கு ரொக்கப்பரிசு வழங்கி பாராட்டினார். நபார்டு உதவி பொது மேலாளர் ராமலிங்கம் சிறப்பு விருந்தினராக பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார். நிகழ்ச்சியில் ல் இந்தியன் பாங்க் மைக்ரோசாட் கிளையின் சார்பில் 4 குழுக்களுக்கு 12 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டது. இதில் இந்தியன் பாங்க் மண்டல அலுவலக முதன்மை மேலாளர்கள் கிருஷ்ண மோகன், பழனியப்பன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜா, தச்சநல்லூர் கிளை மேலாளர் தியாகராஜன்,

சுய உதவிக்குழு சிறப்பு கிளை மேலாளர் ஹெப்சூர் ரஹ்மான், முதுநிலை மேலாளர் நாராயணசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர். கடந்த ஆண்டு ஆலமநாயக்கன்பட்டியை சேர்ந்த அழகர்சாமி முதலிடம் பெற்றார் என்பது குறிப்பிடதக்கது.

**பாளையங்காலில் தண்ணீர் திறக்காததால் பயிர்கள் கருகின: விவசாயிகள் வேதனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 12,2011,01:36 IST

திருநெல்வேலி : பாளையங்காலில் உரிய நேரத்தில் தண்ணீர் திறக்காததால் பல ஆயிரம் ஏக்கர் நிலம் தண்ணீரின்றி வெடிப்பு ஏற்பட்டுள்ளதோடு, பயிர்கள் கருகின வருவதால் விவசாயிகள் வேதனைக்குள்ளாகியுள்ளனர். கார் சாகுபடிக்காக நெல்லை மாவட்டத்தில் உள்ள வடக்கு கோடை மேலழகியான், தெற்கு கோடை மேலழகியான், நதியுண்ணி மற்றும் கன்னடியன் கால்வாயில் கடந்த ஜூன் 14ம்தேதியும், கோடகன்கால்வாய், பாளையங்கால்வாய், நெல்லை கால்வாய்களில் ஜூன் 19ம்தேதியும் தண்ணீர் திறக்கப்பட்டது. பாளையங்கால்வாயில் மட்டும் 20ம் தேதியே தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டது.

இது குறித்து பாளையங்கால் விவசாயிகள் கலெக்டரிடம் புகார் தெரிவித்ததையடுத்து 21ம்தேதி மீண்டும் கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஒரு வாரத்திற்கு அதிகப்படியாக திறக்கப்பட்ட தண்ணீர் படிப்படியாக குறைக்கப்பட்டது. இந்த தண்ணீரை பயன்படுத்தி பாளையங்கால்வாய்க்கு உட்பட சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் நாற்று நடவு செய்தனர். தற்போது நாற்றுக்கு மேல் தண்ணீர் விடவும், களை பறிப்புக்கான தண்ணீர் கால்வாயில் வராததால் நாற்று கருகியுள்ளதோடு, நிலத்தில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடந்த 8ம்தேதி பாளையங்கால்வாயில் தண்ணீர் திறக்க கோரி கலெக்டரிடம் மனு அளித்தனர். அப்போது கலெக்டர், சுழற்சி முறையில் தண்ணீர் திறக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

கடந்த 9ம்தேதி தண்ணீர் திறக்காததால் பாளையங்கால்வாய், கோடகன் கால்வாய் விவசாயிகள் பாளை.,யில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தை முற்றுகையிட்டு தண்ணீர் திறக்க வலியுறுத்தினர். அப்போது பொதுப்பணித்துறை இன்ஜினியர்கள் முன்னிலையில் பாளையங்கால்வாய் மற்றும் கோடகன்கால்வாய்களுக்கு சுழற்சிமுறையில் தண்ணீர் பெறுவது என விவசாயிகளிடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. பொதுப்பணித்துறை அதிகாரிகள், வாய்க்காலில் குறைந்த பட்ச அளவு தண்ணீர் மட்டுமே சுழற்சி அடிப்படையில் திறக்க முடியும் என விவசாயிகளிடம் கூறினர். இதன் படி இன்று(12ம்தேதி) முதல் 18ம்தேதி வரை

பாளையங்கால்வாய்க்கும், அதன் பின் ஒரு வாரத்திற்கு கோடகன் கால்வாய்க்கும் சுழற்சி முறையில் தண்ணீர் திறக்கப்படவுள்ளது.

இதனால் மேடாக உள்ள விளை நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச, சம்பந்தப்பட்ட விவசாயிகள் வாய்க்காலின் குறுக்கே அடைக்க முற்படும் பட்சத்தில் கீழ் பகுதியில் விவசாய நிலங்களுக்கு குறித்த காலகெடுவிற்குள் தண்ணீர் வந்து சேருவதில் சிக்கல் ஏற்படும். இதனால் இருதரப்பு விவசாயிகளிடைய மோதல் ஏற்படும் அபாயம் உள்ளது.
விளை நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதில் விவசாயிகளிடையே மோதலை தவிர்க்கவும், பயிர்களுக்கு உயிர் நீர் வழங்கி காப்பாற்றவும் மாவட்ட நிர்வாகம் கோடகன்கால்வாய், பாளையங்கால்வாய்க்கு மட்டும் சுழற்சிமுறையில் தண்ணீர் வழங்க முடிவு செய்துள்ளதை போல், வடக்கு கோடை மேலழகியான், தெற்கு கோடை மேலழகியான், நதியுண்ணி மற்றும் கன்னடியன் மற்றும் நெல்லை கால்வாய்களுக்கும் சுழற்சி முறையில் தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால் அனைத்து கால்வாய்களுக்குட்பட்ட விளை நிலங்களுக்கும் சீராக தண்ணீர் கிடைக்க வாய்ப்புள்ளது என பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

**செம்மை கரும்பு சாகுபடியில் கூடுதல் மகசூல் வேளாண்மை இணை இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2011,23:04 IST

கடலூர் : புதிய செம்மை கரும்பு சாகுபடி மூலம் கூடுதல் மகசூல் பெறலாம் என கடலூர் வேளாண்மை இணை இயக்குனர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: செம்மை கரும்பு சாகுபடியில், குறைந்த அளவு விதை, தண்ணீர், தேவையான அளவு உரத்தை பயன்படுத்தி அதிகளவு மகசூல் பெறலாம். அதன்படி விதை கரணையில் இருந்து ஒரு பருவை வெட்டி எடுத்து குழித்தட்டு முறையில் நாற்றங்கால் அமைத்து, 25 முதல் 35 நாட்களில் நடவு செய்ய வேண்டும். வயலில் 5 அடி பார் இடைவெளியும், கரும்பு நாற்றுகளுக்கு இடையில் 2 அடி இடைவெளியும் இருக்க வேண்டும். தற்போது ஏக்கருக்கு 30 ஆயிரம் முதல் 48 ஆயிரம் விதைக் கரணைகள் நடவு செய்யப்பட்டு, 25 ஆயிரம் அரவைக் கரும்பு பெறப்படுகிறது.

ஆனால் செம்மை கரும்பு சாகுபடியில் 5 ஆயிரம் நாற்றுகளை நடவு செய்து, 45 ஆயிரம் முதல் 55 ஆயிரம் வரை அரவைக் கரும்பு பெறலாம். நடவு வயலில் அதிகளவு நீர்தேக்கம் தேவையில்லை. அதிகளவு நீர்த் தேக்கம் வளர்ச்சியை கட்டுப்படுத்தும். நாற்று நடவின் மூலமும் மாற்று சால்

பாசனை முறையின் மூலமும் கரும்பின் நீர் தேவையை 30 முதல் 40 சதவீதம் வரை குறையும். சொட்டு நீர் பாசனம் மூலம் நீர் தேவை 80 சதவீதம் வரை சிக்கனமாகும்.

**பண்ருட்டியில் நீர்வள, நிலவள திட்டம் வியாபாரிகள்-விவசாயிகள் கலந்துரையாடல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2011,23:04 IST

பண்ருட்டி : பண்ருட்டியில் நீர்வள, நிலவள திட்டம் சார்பில் வியாபாரிகள், விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. பண்ருட்டி லட்சுமிபதி செல்லம்மாள் திருமண மண்டபத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் நீர்வள நிலவளத்திட்டம் 2011-2012ம் கெடிலம் உபவடி நிலப்பகுதி விவசாயிகள்- வியாபாரிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது.

வேளாண் துணை இயக்குனர்( வேளாண் வணிகம்) தனவேல் தலைமை தாங்கினார். வேளாண் அலுவலர் சுரேஷ் வரவேற்றார். கூட்டத்தில் வேளாண் துணை இயக்குனர் அசோகன், விருத்தசாசலம் வேளாண் அறிவியல் நிலை இணை பேராசிரியர் சுப்ரமணியன், உதவி பேராசிரியர்கள் கண்ணன், சீனுவாசன் ஆகியோர் விவசாயிகள் விவசாய பொருட்களை நேர்த்தியாக உற்பத்தி செய்வது குறித்தும், விற்பனை செய்வது குறித்தும் சிறப்புரையாற்றினர். இதில் மணம்தவிழ்ந்தபுத்தூர் ஏரி நீர்பாசன சங்கத் தலைவர் குப்புசாமி, செம்மேடு முன்னாள் தலைவர் அர்ச்சுனன் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

**வேளாண் வணிக பொருட்குழுக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2011,23:04 IST

சிதம்பரம் : வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள விவசாயிகள் பொருட் குழுக் கூட்டம் சி.முட்லூரில் நடந்தது. சிதம்பரம் வேளாண் அலுவலர் சித்ரா தலைமை தாங்கி விவசாயிகள் பொருட் குழுவினர் செயல்பாடுகள் குறித்து விளக்கிப் பேசினார். ஊராட்சி தலைவர் தவமந்திரி முன்னிலை வகித்தார். மாவட்ட வேளாண் துணை இயக்குனர் தனவேல் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். உதவி வேளாண் அலுவலர்கள் ராயப்பநாதன், ராயர், ரமேஷ் ஆகியோர் செய்திருந்தனர்.

**மாவுப்பூச்சியை அழிக்கும் ஒட்டுண்ணி இலவசம் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி மையம் அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2011,23:11 IST

திண்டிவனம் : மாவட்ட விவசாயிகளுக்கு மாவுப் பூச்சியை அழிக்கக்கூடிய ஒட்டுண்ணி இலவசமாக வழங்கப்படுகிறது. திண்டிவனம் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி மையம் சார்பில், பயிர்களில் தாக்கி கொல்லும் பப்பாளி மாவுப்பூச்சியை அழிக்கக் கூடிய அசிரோபேகஸ் ஒட்டுண்ணி, விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. இது குறித்து எண்ணெய்வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய தலைவர் பேராசிரியர் ராமமூர்த்தி மற்றும் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் பேராசிரியர் சாத்தையா தினமலர் நிருபரிடம் கூறியதாவது: கடந்த 2008 ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தமிழகத்தில் பப்பாளி மாவுப்பூச்சியின் தாக்குதல் அதிகமாக உள்ளது. அமெரிக்காவை பிறப் பிடமாக கொண்ட இந்த மாவுப்பூச்சி, பப்பாளி, மரவள்ளி, காட்டாமணக்கு, கொய்யா, பருத்தி, துவரை, மல்பெரி, செம்பருத்தி, காய்கறி, பழப்பயிர்கள், பூச்செடிகள் அலங்கார செடிகள் உள்ளிட்ட 60 வகையான தாவரங்களை தாக்குகிறது. பாராகாக்கஸ் மார்ஜினேட்டஸ் என்று அறிவியல் பெயர் கொண்ட மாவுப்பூச்சிகளின் தாக்குதலால் பாதிக்கப்படும் தாவரம், இலைகள், நுனிக்குருத்துக்கள் வளர்ச்சிகுன்றி காணப்படும். தாக்குதல் தீவிரமாகும் போது தாவரம் காய்ந்து, இறந்துவிடும். பாதிக்கப்பட்ட தாவரத்தின் மீது எறும்புகளின் நாட்டம் அதிகமாக இருக்கும்.

இந்த மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த பெங்களூருவில் உள்ள தேசிய வேளாண் முக்கியத்துவ பூச்சிகள் ஆராய்ச்சி மையம் சார்பில், போர்டோரிக்கோ தீவுகளிலிருந்து மூன்று ஒட்டுண்ணிகள் வரவழைக்கப்பட்டுள்ளன. இவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்கள் மூலம் அதிகளவில் உற் பத்தி செய்து, விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. அசிரோபேகஸ் பப்பாயே என கூறப்படும் ஒட்டுண்ணி குளவிகள் 50 முதல் 60 முட்டைகள் வரை இடும். இவை 16 முதல் 18 நாட்களில் அடுத்த தலைமுறை பூச்சிகளை உருவாக்கும். இது 5 முதல் 7 நாட்கள் வரை உயிர் வாழும். இந்த குளவிகள் மாவுப்பூச்சியின் இரண்டாம் பருவநிலையின் போது தாக்கி அழிக்கின்றது. திண்டிவனத்தில் உள்ள எண்ணெய்வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண் அறிவியல் நிலையத்தை அணுகி, ஒட்டுண்ணிகளை விவசாயிகள் இலவசமாக பெற்று பயனடையலாம். இவ்வாறு பேராசிரியர்கள் ராமமூர்த்தி, சாத்தையா தெரிவித்தனர். பூச்சியியல் பேராசிரியர் ராதாகிருஷ்ணன், பயிர் நோயியல் துறை உதவி பேராசிரியர் செந்தில்வேல் உடனிருந்தனர்.

**விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் ரூ.3 லட்சம் வரை குறுகிய கால கடன் : இந்தியன் பாங்க் அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2011,23:10 IST

விழுப்புரம் : விவசாயிகளுக்கு குறுகிய கால கடனாக 7 சதவிகித வட்டியில் ரூபாய் 3 லட்சம் வரை வங்கி கடன் வழங்கப் படுவதாக இந்தியன் வங்கி மண்டல பொதுமேலாளர் உலகன் தெரிவித்தார். இந்தியன் வங்கி சார்பில் விக்கிர வாண்டி, பெரியதச்சூர், ராதாபுரம் பகுதி விவசாயிகளுக்கு கடனுதவி வழங்கப் பட்டது. இதன்படி பழத்தோட்டம் அமைத் தல், எண்ணெய் வித்து பயிர் கடன், நெல் சாகுபடி, மண்புழு உரம் தயாரித்தல், பட் டுப்புழு வளர்த்தல், கரும்பு சாகுபடி கடன் மற்றும் சுய உதவிக்குழுக்களுக்கு வளர்ச்சி கடன் உள்ளிட்ட 3 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பிலான கடனுதவி வழங் கும் விழா விக்கிரவாண்டியில் நடந்தது. விழுப்புரம் முன்னோடி வங்கி மேலா ளர் பாலச்சந்திரன் தலைமை தாங்கினார். மண்டல அலுவலக சீனியர் மேலாளர் (விவசாயம்) மனோகரன் முன்னிலை வகித்தார். விக்கிரவாண்டி கிளை மேலாளர் குமார் வரவேற்றார். விழாவில் முன்னோடி விவசாயி குமாரசாமி, ராதாபுரம் விவசாயிகள் குழு தலைவர் செல்வகணபதி, வங்கி மேலாளர்கள் ராஜேந்திரன், நரசிம்மன், கிராம வளர்ச்சி அலுவலர் சுகுணா, அலுவலக உதவியாளர் அரிகோவிந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி மற்றும் விழுப்புரம் மண்டல பொதுமேலாளர் உலகன் கடனுதவி களை வழங்கி பேசியதாவது : விவசாயிகளின் வளர்ச்சிக்கு இந்தியன் வங்கி பல்வேறு வகைகளில் உறுதுணை யாக உள்ளது. விவசாயிகளுக்கு குறுகிய கால கடனாக 7 சதவிகித வட்டியில் ரூபாய் 3 லட்சம் வரை வங்கி கடன் வழங்கப்படுகிறது. வாடிக்கை யாளர்கள் டெபாசிட் செய்யும் பணத்தையே விவசா யிகளுக்கு கடனாக வழங்குகிறோம். கடன் பெறும் விவசாயிகள், சுய உதவிக்குழுவினர் உரிய காலத்தில் வங்கி கடனை திருப்பி செலுத்தினால் தான் டெ பாசிட்தாரர்கள் கேட்கும் போது பணம் திருப்பி தர முடியும். வாங்கிய கடனை திருப்பி செலுத்தும் போது வட்டிச் சுமை குறைந்து, வங்கியில் நல்ல பெயரையும் ஏற்படுத்தும். இந்தியன் வங்கி தொடர்ந்து விவசாயிகளின் நலன் கருதி செயல்படும்.

**கேரளாவில் தேவையால் கருப்பட்டி விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2011,23:51 IST

கோபிசெட்டிபாளையம்: ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு, கேரளாவுக்கு கருப்பட்டி அனுப்புவது அதிகரித்துள்ளதால், கருப்பட்டி விலை உயர்ந்துள்ளது. தமிழகத்தில் கள் இறக்க தடை விதிக்கப்பட்டதால், கோபி வட்டாரத்தில் கருப்பட்டி காய்ச்சி விற்பதை ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் செய்து வருகின்றனர். மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் பனை மரங்களில் இருந்தும், ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் தென்னை மரங்களில் இருந்தும் பதநீரை இறக்கி, கருப்பட்டி தயார் செய்யப்படுகிறது. சில வாரங்களுக்கு முன் பனையில் பதநீர் சீஸன் முடிவுற்றது. தற்போது, தென்னை மரங்களில் மட்டுமே பதநீர் இறக்கப்படுகிறது. ஒரு தென்னை மரத்தில் நாள் ஒன்றுக்கு ஆறு லிட்டர் வரை பதநீர் கிடைக்கும். 18 லிட்டர் பதநீரை காய்ச்சினால்தான் 10 கிலோ கருப்பட்டி கிடைக்கும். சில நாட்களாக கோபி சுற்று வட்டாரத்தில் மழை பெய்வதால் பதநீர் இறக்குவது குறைந்துள்ளது. இதன் காரணமாக, கருப்பட்டி உற்பத்தியும் குறைந்து விட்டது. ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு, கேரளாவுக்கு கருப்பட்டி அனுப்புவது அதிகரித்துள்ளது. அதன் காரணமாக கருப்பட்டி விலை 10 கிலோவுக்கு 18 ரூபாய் அதிகரித்துள்ளது.

கருப்பட்டி உற்பத்தியாளர்கள் கூறியதாவது: கோபி, நம்பியூர் உள்பட சுற்றுவட்டார பகுதிகளில் நடப்பாண்டு அதிகளவில் புகையிலை பயிரிடப்பட்டுள்ளது. புகையிலையை பதப்படுத்தி, காய வைக்க, கருப்பட்டி அவசியம் தேவை. மேலும், ரம்ஜான் பண்டிகை பண்டிகை முன்னிட்டு கேரளாவுக்கு அதிகளவில் கருப்பட்டி அனுப்பி வைக்கப்படுகிறது. வழக்கமாக ஒரு லோடு கருப்பட்டி செல்லும் இடத்தில், தற்போது மூன்று லோடு அனுப்பி வைக்கப்படுகிறது. தேவை அதிகரித்தன் காரணமாக, சென்ற வாரம் 10 கிலோ கருப்பட்டி 380 ரூபாய்க்கு விற்கப்பட்டது, நடப்பு வாரம் 398 ரூபாயாக உயர்ந்தது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**தொண்டாமுத்தூரில் உர விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2011,23:22 IST

பேரூர் : தொண்டாமுத்தூர், புள்ளாக்கவுண்டன்புதூ ரில், விவசாயிகளுக்கான உர விழிப்புணர்வு முகாம் நடந்தது. விழிப்புணர்வு முகாமில், கோவை உதவி வேளாண்மை இயக்குனர் ஜெயஸ்ரீ தலைமை வகித்து பேசுகையில், ""மண் பரிசோதனை செய்து உரமிட்டால் மண்ணின் வளம்

கெடாமல் காப்பற்றப்படுவதோடு, விவசாயிகளின் பணமும் வீணாகாமல் இருக்கும். விதைப்பதற்கு முன் விதைகளை விதைநேர்த்தி செய்து பயன்படுத்த வேண்டும்,"என்றார். வேளாண் அலுவலர் கவிதா பேசுகையில், ""உயிர் உரங்கள் இடுவதால் இயற்கை சத்துக்கள் மற்றும் பயிர்களின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகும்," என்றார். முகாமில், எம்.எப்.எல்., நிறுவன மேலாளர் செந்தில்குமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் ஜெயபிரகாஷ், சுப்ரமணி மற்றும் விவசாயிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ***12–வது ஐந்தாண்டு திட்டம் பொருளாதார வளர்ச்சி 8.7 சதவீதமாக இருக்கும்***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*எதிர்வரும் 12–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2012–2017), நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.5 முதல் 8.7 சதவீதமாக இருக்கும் என மத்திய திட்டக் குழு தற்போது மதிப்பீடு செய்துள்ளது.*

*அமெரிக்க கடன்பத்திரங்கள் குறித்த தர மதிப்பீட்டை ஸ்டாண்டர்டு அண்டு பூர் நிறுவனம் குறைத்ததால் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்த கேள்விக்கு பதில் அளிக்கையில் திட்டமிடல் துறைக்கான ராஜாங்க அமைச்சர் அஷ்வாணி குமார் இவ்வாறு கூறினார்.*

*பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்கான வளர்ச்சி இலக்குகள் குறித்து இன்னும் இறுதி முடிவுகள் எடுக்கப்படவில்லை. விரைவில் இது குறித்த வரைவு அறிக்கை ஒன்றை தயாரித்து மத்திய அமைச்சரவையின் ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளது. தற்போதைய நிலையில் அடுத்த ஐந்தாண்டு திட்ட காலத்தில் அடிப்படைக் கட்டமைப்புத் துறைகளில் மட்டும் சுமார் ரூ.50 லட்சம் கோடி முதலீட்டை ஈர்க்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனால் நாட்டின் வலுவான பொருளாதார வளர்ச்சி உறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*மத்திய திட்டக் குழு சில மாதங்களுக்கு முன்னர் எதிர்வரும் ஐந்தாண்டு திட்ட காலத்தின்போது நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9.5 சதவீதமாக இருக்கும் என தெரிவித்திருந்தது. பின்னர் இதனை 9 சதவீதமாக குறைத்து இப்போது 8.5–8.7*

சதவீதமாக குறைத்துள்ளது. நடப்பு ஐந்தாண்டு திட்ட காலத்தில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.2 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ரூ.2547 கோடி செலவில் நீர்வள–நிலவள திட்டம் ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, ஆக.12–

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ரூ.2547 கோடியில் நீர்வள–நிலவள திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக முதல்–அமைச்சர் ஜெயலலிதா கூறினார். சட்டசபையில் நேற்று விதி எண் 110–ன் கீழ் முதல்–அமைச்சர் ஜெயலலிதா ஒரு அறிக்கை வாசித்தார். அதன் விவரம் வருமாறு:–

விவசாயத்தை பெருக்க...

தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்கள் வேளாண்மைத் தொழிலையே நம்பி இருப்பதால், வேளாண் பெருமக்கள் வாழ்வில் வளம் பெறவும், அவர்களின் வாழ்வாதாரம் செழிக்கவும், வேளாண் உற்பத்தித்திறனையும், வேளாண் பெருமக்களின் வருமானத்தையும் அதிகப்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. நீடித்த வேளாண் வளர்ச்சியை அடைவதில் பாசனத்திற்கான நீர்வள அமைப்புகளை வலுப்படுத்துதல் இன்றியமையாதது ஆகிறது.

அந்த வகையில், மாநிலத்தில் பாசன நிலங்களுக்கு ஆதாரமாக உள்ள பாசன உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்தி பாசனக் கால்வாய் அமைப்புகளைப் புனரமைத்து அவைகளை பழைய நிலைக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் உலக வங்கி உதவியுடன் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம் என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்டது.

நீர்வள நிலவள திட்டம்

இந்தத் திட்டத்தின் தொடர் திட்டமாக, தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம், உலக வங்கி நிதியுதவியுடன், ரூ.2,547 கோடி மதிப்பீட்டில், 15,24,607 ஏக்கர் பாசனப்பரப்பு பயனடையும் வகையில், நீர்வள ஆதாரத் துறை, வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத் துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தோட்டக்கலைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் வேளாண்மை விற்பனைத் துறை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும்.

தமிழகத்தில் உப வடிநில கட்டமைப்பு முறையில் ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையின் மூலம் பாசன நீர் வழங்கும் சேவை மற்றும் பாசன நில வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தெரிவு செய்யப்பட்ட 60 உப வடிநிலங்களின் 15,24,607 ஏக்கர் பாசனப் பரப்பு அடங்கிய பாசன அமைப்புகளை நவீனப்படுத்துவதன் மூலம் பெருமளவு நீர் விநியோகத்தினை மேம்படுத்த இத்திட்டம் முனைகிறது. மேலும், 4,848 ஏரிகள், 668 அணைக்கட்டுகள் மற்றும் 7,893 கிலோ மீட்டர் நீர்வழங்கு கால்வாய்களை புனரமைத்து சீர்படுத்துவதன் மூலம் ஏரிப் பாசன முறையை நவீனமயமாக்குதல் மற்றும் கால்வாய்ப் பாசன அமைப்பை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தில், நீர் மேலாண்மை மூலம் அதிக மகசூல் பெறத்தக்க வகையில் தேவையான நீரை மட்டுமே பயன்படுத்தி மீதமாகும் நீரை அதிக பாசனப் பகுதிகளுக்கு அளித்து வேளாண் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுகிறது. மேலும், நீரை பயன்படுத்துவோர் மூலமாக நீர்பாசனச் சங்கங்கள் அமைத்து அவர்களின் ஈடுபாட்டுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அடையாறு உப வடிநிலம்

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் ஒரு அங்கமாக, காஞ்சீபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள அடையாறு உப வடிநிலத்தின் கீழ் உள்ள முறைசார்ந்த மற்றும் முறைசாரா ஏரிகள் – மற்றும் நீர்வழங்கு கால்வாய்களை 31 கோடியே 19 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனப்படுத்திட நிர்வாக ஒப்புதல் அளித்து நான் ஆணையிட்டுள்ளேன்.

அடையாறு உப வடிநிலத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு நீர் வழங்கும் முறையை செம்மையாக்க, அதன் கட்டமைப்பை நவீனப்படுத்த பின்வரும் பணிகள் இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

45 ஆயிரம் ஏக்கர்

ஏரிகளின் கரைகளை இயந்திரங்களைக் கொண்டு பலப்படுத்துதல், பழுதுபட்ட மதகுகளை மறுகட்டமைப்பு செய்தல், பழுதுபட்ட சிற்றணைகளை மறுகட்டமைப்பு செய்தல், நீர்வழங்கு கால்வாய்களை இயந்திரங்கள் கொண்டு தூர்வாருதல், ஏரிகளின் எல்லைகளில் எல்லைக் கற்களை அமைத்தல், பாசன கால்வாய்களில் நீர் அளவீட்டு கட்டமைப்பு ஏற்படுத்துதல், இரண்டு ஏரிகளின் தெரிவு செய்யப்பட்ட வரத்துக் கால்வாய்களில் 600 மீட்டர் நீளத்திற்கு அக உறை (லைனிங்) அமைத்தல், மற்றும் மற்ற ஏரிகளின் கால்வாய்களில் 30 முதல் 50 மீட்டர் நீளத்திற்கு அக உறை அமைத்தல். இதனால், காஞ்சீபுரம் மாவட்டத்திலுள்ள செங்கல்பட்டு, தாம்பரம் மற்றும்

ஸ்ரீபெரும்புதூர் வட்டங்கள் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருவள்ளூர் மற்றும் பூந்தமல்லி வட்டங்களிலுள்ள முறைசார்ந்த மற்றும் முறைசாரா ஏரிகளின் கீழ் உள்ள 45,597.10 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களின் பாசன வசதி மேம்பாடு அடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிளியாறு–செய்யாறு

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் மற்றொரு அங்கமாக, காஞ்சீபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள கிளியாறு உப வடிநிலம் மற்றும் செய்யாறு உப வடிநிலத்தின் ஒரு பகுதியின் கீழ் உள்ள ஏரிகள், அணைக்கட்டுகள் மற்றும் நீர்வழங்கு கால்வாய்களை 84 கோடியே 88 லட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனப்படுத்திட நிர்வாக ஒப்புதல் அளித்து நான் ஆணையிட்டுள்ளேன். செய்யாறு–கிளியாறு உப வடிநிலத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு நீர் வழங்கும் முறையை செம்மையாக்க, அதன் கட்டமைப்பை நவீனப்படுத்த, பின்வரும் பணிகள் இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும்:–

நீர்வழங்கு கால்வாய்களை இயந்திரங்கள் கொண்டு தூர்வாரி மேம்படுத்துதல் மற்றும் 200 மீட்டர் இடைவெளிகளில் மாதிரி கால்வாய் வடிவம் அமைத்தல், பழுதுபட்ட சிற்றணைகளை புனரமைத்தல், பழுதுபட்ட மதகுகளை மறுகட்டமைப்பு செய்தல், பழுதுபட்ட மதகுகளை புனரமைத்தல், பாசன ஏரிகளின் மதகுகளுக்கு கீழ் உள்ள நீர்வழங்கு கால்வாய்களில் 35 மீட்டர் தூரத்திற்குத் தேவையான அக உறை அமைத்தல், எல்லா மதகுகளின் வெளிப்புறங்களிலும் நீர் அளவீட்டு அமைப்பு கட்டமைப்பை ஏற்படுத்துதல், தேவைப்படும் ஏரிகளின் மதகுகளின் இடது வலது புறங்களில் பாதுகாப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் அதன் கரைகளில் 500 மீட்டர் இடைவெளிகளில் மாதிரி கால்வாய் வடிவம் அமைத்தல், மதகுகளுக்கு திருகு அமைப்பு கொண்ட கதவுகள் அமைத்தல், ஏரிகளின் நீர் பரப்பு பகுதிகளில் எல்லைக் கற்களை நடுதல்.

91 ஆயிரம் ஏக்கர்

மேற்கண்ட இந்தப் பணிகளை மேற்கொள்வதன் மூலம், காஞ்சீபுரம் மாவட்டத்தில் உள்ள அச்சரப்பாக்கம், மதுராந்தகம், சித்தாமூர், உத்திரமேரூர் மற்றும் காஞ்சீபுரம் ஆகிய ஒன்றியங்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள வெம்பாக்கம், செய்யாறு, அன்னக்காவூர், வந்தவாசி, பெரணமல்லூர், தெள்ளாறு மற்றும் மேற்கு ஆரணி ஆகிய ஒன்றியங்களில் உள்ள 453 ஏரிகள் மற்றும் இரண்டு அணைக்கட்டுகளின் கீழுள்ள 91,081.25 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களின் பாசன வசதி மேம்பாடு அடையும். இவ்வாறு முதல்–அமைச்சர் ஜெயலலிதா கூறினார்.

## விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசன மானியம் முழுமையாக கிடைக்க குழு அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பேச்சு

*சென்னை, ஆக.12–*

*"சொட்டுநீர் பாசன மானியம் விவசாயிகளுக்கு முழுமையாக கிடைக்க குழு அமைக்கப்படும்" என்று சட்டசபையில் வேளாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.*

*சொட்டுநீர் பாசனம்*

*சட்டசபையில் நேற்று கேள்வி நேரத்தின்போது காரைக்குடி எம்.எல்.ஏ. சோழன் சித.பழனிச்சாமி (அ.தி.மு.க.), " புதுவயல் பேரூராட்சியில் மானிய விலையில் சொட்டுநீர் பாசனம் அமைக்கப்படுமா?" என்று கேள்வி எழுப்பினார்.*

*அதற்குப் பதில் அளித்துப் பேசிய வேளாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், "சொட்டுநீர் பாசன திட்டம் சிவகங்கை மாவட்டம் உள்பட அனைத்து மாவட்டங்களிலும் 2007–08–ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதுவயல் பேரூராட்சி பகுதியில் சொட்டுநீர் பாசனம் தேவைப்படும் விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்புகொண்டால் மானிய விலையில் சொட்டுநீர் பாசனம் அமைத்து தரப்படும்'' என்றார்.*

*குழு அமைக்கப்படும்*

*அப்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன் துணை கேள்வி எழுப்பி பேசும்போது, "கடந்த ஆட்சியில் சொட்டுநீர் பாசனத்திற்கு மானியம் வழங்கியதில் முறைகேடுகள் நடந்துள்ளன. திட்டத்திற்கான உண்மையான விலையை விட இரட்டிப்பாக விலையை காண்பித்து கம்பெனியினரும், முந்தைய ஆட்சியாளர்களும் கமிஷன் பெற்றுள்ளனர். தற்போது சிறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம் வழங்கும் திட்டம் பாராட்டுக்குரியது. விவசாயிகளுக்கு தரமான சொட்டுநீர் பாசன பொருட்கள் கிடைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கேட்டார்.*

*அதற்கு அமைச்சர் செங்கோட்டையன் பதில் அளித்துப் பேசும்போது, "விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசன மானிய உதவிகள் சிந்தாமல் சிதறாமல் கிடைத்திட நடவடிக்கை எடுக்கப்படும். இதை முறைப்படுத்த ஒரு குழு அமைக்கப்படும்'' என்றார். சொட்டுநீர் பாசனம் தொடர்பாக உறுப்பினர்கள் எம்.குணசேகரன் (அ.தி.மு.க.), கு.ப.கிருஷ்ணன்*

(அ.தி.மு.க.) என்.ஆர்.ரெங்கராஜன் (காங்கிரஸ்) ஆகியோர் எழுப்பிய துணை கேள்விகளுக்கு பதில் அளித்துப்பேசும்போது அமைச்சர் செங்கோட்டையன் கூறியதாவது:–

நடவடிக்கை எடுக்கப்படும்

தமிழகத்தில் நிலத்தடி நீர் மட்டத்தை பாதுகாக்கும் பொருட்டு முதல்–அமைச்சர் ஜெயலலிதா கடந்த 2003–ம் ஆண்டு மழைநீர் சேகரிப்பு திட்டத்தை கொண்டுவந்தார். அந்த வகையில், வறட்சி பகுதிகளில் சொட்டுநீர் பாசன திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்திய வரலாற்றிலேயே சிறுவிவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசன திட்டம் அறிவித்திருப்பது ஜெயலலிதா மட்டும்தான்.

கடந்த ஆட்சியின்போது சொட்டுநீர் பாசன மானியம் வழங்கியதில் முறைகேடுகள் நடந்திருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். முறைகேடுகள் எங்கு நடந்தது? எந்தெந்த நிறுவனங்கள் ஈடுபட்டன? என்ற விவரங்களை உறுப்பினர்கள் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.இவ்வாறு அமைச்சர் செங்கோட்டையன் கூறினார்.

### கடந்த 18 வாரங்களில் இல்லாத அளவிற்கு

# உணவு பொருள் பணவீக்கம் 9.90 சதவீதமாக உயர்ந்தது

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி



காய்கறிகள், பழங்கள் மற்றும் வெங்காயம் விலை உயர்வால், ஜூலை 30–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பொருள் பணவீக்கம் கடந்த 18 வாரங்களில் இல்லாத அளவிற்கு 9.90 சதவீதமாக உயர்ந்துள்ளது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இந்த பணவீக்கம் முந்தைய வாரத்தில் 8.04 சதவீதமாக இருந்தது. கடந்த 2010–ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் கடைசி வாரத்தில் 16.45 சதவீதமாக இருந்தது.

## உருளைக்கிழங்கு

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓராண்டு கால அடிப்படையில் காய்கறிகள் விலை 14.61 சதவீதமும், பழங்கள் விலை 16.49 சதவீதமும் உயர்ந்துள்ளது. வெங்காயம் விலை 36.62 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில், உருளைக் கிழங்கு விலை 10.85 சதவீதம் உயர்ந்துள்ளது. தானியங்கள் விலை 6.22 சதவீதமும், முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 13.44 சதவீதமும் உயர்ந்துள்ளது. அதேசமயம், பருப்பு வகைகள் விலை 6 சதவீதம் குறைந்துள்ளது. எண்ணெய் வித்துக்கள், கனிமங்கள் உள்ளிட்ட உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் 15.60 சதவீதத்திலிருந்து 15.05 சதவீதமாக குறைந்துள்ளது.

எரிபொருள் பணவீக்கம் 12.12 சதவீதத்திலிருந்து 12.19 சதவீதமாக அதிகரித்துள்ளது. பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வால் ஏற்பட்ட தாக்கத்தை இது எடுத்துக் காட்டுகிறது. அத்தியாவசிய பொருள்கள் பணவீக்கம் 10.99 சதவீதத்திலிருந்து 12.22 சதவீதமாக உயர்ந்துள்ளது. பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் இதன் பங்களிப்பு 20 சதவீதமாக உள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் பொது பணவீக்கம் 9.44 சதவீதமாக உயர்ந்து இருந்தது. பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில், பாரத ரிசர்வ் வங்கி, கடந்த 2010–ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து இதுவரை, முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை 11 முறை உயர்த்தி உள்ளது.

## மதிப்பீடு

அண்மையில் வெளியிடப்பட்ட நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டிற்கான பொருளாதார ஆய்வு அறிக்கையில், இவ்வாண்டு அக்டோபர் மாதம் வரை பொது பணவீக்கம் 9 சதவீதமாக இருக்கும் என்றும், வரும் 2012–ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இது 6.5 சதவீதமாக குறையும் என்றும் பிரதம மந்திரியின் பொருளாதார ஆலோசனைக் குழு மதிப்பீடு செய்துள்ளது.

இந்நிலையில், ஜூலை 30–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் உயர்ந்து இருப்பது மத்திய அரசுக்கும், பாரத ரிசர்வ் வங்கிக்கும் ஒரு சவாலாக உள்ளது.

# ஒரே வாரத்தில் 2% அதிகரிப்பு உணவு பணவீக்கம் உயர்வு

பதிவு செய்த நாள் : 8/12/2011 1:45:19



புதுடெல்லி : கடந்த ஜூலை 30ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 9.9 சதவீதமாக உயர்ந்துள்ளது. ஒரே வாரத்தில் 1.86 சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த ஜூலை 23ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 8.04 சதவீதமாக இருந்தது. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக, பணவீக்கம் கவலை அளிக்கும் வகையில் இருந்து வருகிறது. இதைக் கட்டுப்படுத்த மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. குறிப்பாக கடந்த 16 மாதங்களில் 11 தடவை கடன் வட்டி உயர்த்தப்பட்டது. எனினும், பணவீக்கம் எதிர்பார்த்த அளவுக்கு குறையவில்லை.

இந்நிலையில், கடந்த ஜூலை 30ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 9.9 சதவீதமாக உயர்ந்துள்ளதால் மத்திய அரசுக்கு மேலும் நெருக்கடி அதிகரித்துள்ளது. இது கடந்த நான்கரை மாதங்களில் இல்லாத உயர்வாகும். கடந்த மார்ச் 12ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் இது 10.05 சதவீதமாக இருந்தது.

வெங்காயம் விலை 36.62 சதவீதமும், பழங்கள் 16.49 சதவீதமும், காய்கறிகள் 14.61 சதவீதமும், முட்டை, இறைச்சி மற்றும் மீன் விலை 13.44 சதவீதமும் அதிகரித்தே உயர்வுக்கு முக்கிய காரணம். எனினும், பருப்பு வகைகள் விலை 6 சதவீதம் சரிந்துள்ளது. முதல்நிலை பொருட்களின் விலை 12.22 சதவீதம் அதிகரித்துள்ளது.

விலைவாசியை குறைக்குமா? அரசு மீது நம்பிக்கையிழப்பு

மத்திய அரசு விலைவாசியை குறைக்கும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் குறைந்து வருகிறது. சமீபத்தில் நடத்திய ஓர் ஆய்வில் இந்திய பொருளாதாரம் சிறப்பாக இருக்கும் என்று 47 சதவீதம் பேர் மட்டுமே கூறியுள்ளனர். கடந்த 2007ம் ஆண்டில் இது 58 சதவீதமாக இருந்தது. விலைவாசி கடுமையாக உயர்ந்து வரும் வேளையில், இதைக் குறைக்க அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. பல்வேறு பிரச்னைகள் தொடர்பாக எதிர்க்கட்சிகளும் நாடாளுமன்றத்தை முடக்கி வருகின்றன. இதனால் மத்திய அரசு மீது பொதுமக்களின் நம்பிக்கை குறைந்து வருகிறது.